731

OFFICE OF THE REGISTRAR
REGISTERED
23 AUG 1916

Primary Sabbath-School Lessons

on the Book of Genesis

(Isaac to Jacob)

ஆதியாகமத்தைப்பற்றி பிள்ளைகளுக்கு
ஓய்வு நாள் பள்ளிக்கூடங்களில்
உபயோகிக்கத்தக்க

வேத பாடங்கள்.

(ஈசாக்கிலிருந்து யாக்கோபு வரை)

PUBLISHED BY THE
INTERNATIONAL TRACT SOCIETY, MADRAS
1916

221.4

OFFICE OF THE REGISTRAR [illegible] 23 AUG 1915 MADRAS.

14-ம் பாடம்.

யாக்கோபும் ஏசாவும்.

மனப் பாடம்: "கர்த்தர் ஈசாக்கை ஆசீர்வதித்ததினால் அந்த வருஷத்தில் நூறு மடங்கு பலன் அடைந்தான், அவன் ஐசுவரியவனாகி வரவர விருத்தி யடைந்து மகா பெரியவனானான்" ஆதி. 26 : 12, 13.

ஈசாக்கு ரெபேக்காளை விவாகம் பண்ணின பிற்பாடு ஒரு பஞ்சம் தேசத்தில் உண்டாயிற்று. கர்த்தர் ஈசாக்குக்கு தரிசனமாகி அவன் எகிப்துக்குப் போகாமல் கேராரிலே இருக்கும்படியாகச் சொன்னார். மேலும் கர்த்தர் அவன் தகப்பனாகிய ஆபிரகாமோடு செய்த உடன்படிக்கையை ஈசாக்கிடத்தில் திரும்பவும் புதுப்பித்து, அவனையும் அவனுக்குப் பின் அவன் பிள்ளைகளையும் ஆசீர்வதிப்பதாக வாக்களித்தார்.

ஈசாக்கு கேராரில் தங்கி அங்கே விதை விதைத்தான். அந்த வருஷத்தில் நூறு மடங்கு பலன் கிடைத்தது. கர்த்தர் அவனை மிகவும் ஆசீர்வதித்து அவனுடைய ஆடு மாடுகளும் வேலைக்காரரும் பெருகும்படியாகச் செய்தார்.

அவன் இப்படி ஐசுவரியவானானதினால் அந்நாட்டிலிருந்த பெலிஸ்தியர் அவன் மேல் பொறாமைப் பட்டார்கள். அவர்கள் ராஜா ஈசாக்கை நோக்கி: நீ எங்களைப் பார்க்கிலும் மிகவும் பலத்தவனாயிருக்கிறாய். ஆகையால் இந்த நாட்டை விட்டுப் போய் விடு என்று கற்பித்தான்.

ஈசாக்கு அவ்விடத்தை விட்டு கேராரின் பள்ளத்தாக்கிலே கூடாரம் போட்டான். அவனுடைய வேலைக்காரர் அங்கே ஒரு கிணறு வெட்டி அதிலே சுரக்கும் நீரூற்றைக் கண்டார்கள். கேராரின் மேய்ப்பர் அந்தக் கிணறு தங்களுடையதென்று சொல்லி ஈசாக்குடைய மேய்ப்பரோடு வாது பண்ணினார்கள். பிறகு வேறொரு துரவை வெட்டினார்கள். அதைக் குறித்தும் அவ்வூர் மேய்ப்பர்கள் வாக்குவாதம் பண்ணினார்கள். ஆகையால் அவர்கள் அவ்விடம் விட்டுப் போய் வேறொரு கிணறு வெட்டினார்கள். அதைப் பற்றி வாக்கு வாதம் உண்டாகவில்லை.

பின்பு ஈசாக்கு அங்கிருந்து பெயெர்செபாவுக்குப் போனான். அங்கே திரும்பவும் கர்த்தர் அவனுக்குத் தரிசனமாகி அவனைத் தைரியப்படுத்தினார். அங்கே ஒரு பலிபீடத்தைக் கட்டி, தன் கூடாரத்தைப் போட்டு, ஒரு துரவையும் வெட்டினான். பெலிஸ்தியர் அவ்விடத்தில் ஈசாக்கைக் காணவந்து: நாங்கள் உமக்கு ஒரு தீங்கும் செய்யாமல் உம்மைச் சுகமாய் அனுப்பி விட்டதுபோல், நீரும் எங்களுக்குத் தீங்கு செய்யாதிருக்க வேண்டுமென்று உடன்படிக்கை பண்ணினார்கள்.

ஈசாக்கு ரெபெக்காளை விவாகம் பண்ணி இருபது வருஷத்திற்குப் பிறகு கர்த்தர் அவர்களுக்கு இரட்டைப் பிள்ளைகளைக் கொடுத்தார். ஒருவனுக்கு ஏசா என்றும்

மற்றவனுக்கு யாக்கோபு என்றும் பேரிட்டார்கள். இந்தப் பிள்ளைகள் பெரியவர்க ளானபோது ஏசா வேட்டையில் வல்லவனுனான். யாக்கோபு கூடாரங்களில் தங்கி ஆடு மாடு களைப் பார்த்துக் கொண்டிருந்தான். ஈசாக்கு ஏசாவின் மேல் பட்சமா யிருந்தான். ரெபேக்காள் யாக்கோபின்மேல் பட்சமாயிருந்தாள்.

ஒரு நாள் ஏசா வேட்டையாடப் போய் பசியோடு திரும்பி வந்தான். யாக்கோபு கூழ் சமைத்துக் கொண் டிருந்தான். ஏசா அதில் கொஞ்சம் தனக்குத் தரும்படிக் கேட்டான். உன் சேஷ்ட புத்திர பாகத்தை எனக்குத் தந்தால் நான் கொடுக்கிறேன் என்று யாக்கோபு ஒப்புக் கொண்டான். அதற்கு ஏசா; நான் பசியால் சாகப்போகி றேனே. இந்த சேஷ்ட புத்திரபாகம் எனக்கு என்னத் திற்கு என்றான். அப்படியே ஏசா கொஞ்சம் அப்பத்தை யும் பயிற்றங் கூழையும் யாக்கோபிடம் வாங்கிக்கொண்டு தன் சேஷ்ட புத்திர பாகத்தை அதனுக்கு விற்றுப்போட் டான். "இப்படி ஏசா தன் சேஷ்ட புத்திர பாகத்தை அலட்சியம் பண்ணினான்"

ஏசா நாற்பது வயதானபோது அஞ்ஞான ஜனத்தில் தனக்குப் பெண்களைக் கொண்டான். இது அவனுடைய தகப்பனுக்கும் தாய்க்கும் மன நோவாயிருந்தது.

கேள்விகள்.

1. ஈசாக்கின் விவாகத்திற்குப் பின் தேசத்தில் என்ன உண்டானது?

2. கர்த்தர் ஈசாக்குக்கு என்ன கற்பித்தார்?

3. எந்த உடன்படிக்கையைக் கர்த்தர் ஈசாக்குக்குப் புதுப்பித்தார்?

4. கேராரில் கர்த்தர் ஈசாக்கை எப்படி ஆசீர்வதித்தார்?

5. அது பெலிஸ்தியருக்கு என்னமா யிருந்தது? அவர்கள் செய்த தென்ன?

6. கேராரை விட்டு ஈசாக்கு எங்கே போனான்?

7. அந்தப் பள்ளத்தாக்கில் அவனுடைய வேலைக்காரருக்கு நடந்த தென்ன?

8. பிறகு ஈசாக்கு எங்கே போனான்?

9. யார் அவனுக்கு தரிசனமானார்? எதற்காக தரிசனமானார்?

10. ஈசாக்கு பெயெர்செபாவி லிருக்கும் போது பெலிஸ்தியர் அவனோடு என்ன உடன்படிக்கை பண்ணினார்கள்?

11. ஈசாக்கின் இரண்டு குமாரர் பேரென்ன?

12. அவர்கள் என்ன தொழில் செய்தார்கள்?

13. பெற்றோர் அவர்களை எப்படி நடத்தினார்கள்?

14. ஏசா தன் சேஷ்ட புத்திர பாகத்தை விற்றவித மென்ன?

15. ஏசா யாரை விவாகம் பண்ணினான்?

OFFICE 23 AUG 1916 MADRAS.

15-ம் பாடம்.

யாக்கோபு தன் தகப்பனை வஞ்சித்தல்.

மனப் பாடம்: "யாக்கோபு தன் தகப்பனாகிய ஈசாக் கண்டையில் கிட்டப்போனான். அவன் இவனைத் தடவிப் பார்த்து, சத்தம் யாக்கோபின் சத்தம் கைகளோ ஏசாவின் கைகள் என்று சொல்லி இன்னான் என்று அறியாமல் அவனை ஆசீர்வதித்தான்" ஆதி. 27 : 22, 23.

ஈசாக்கு முதிர் வயதானபோது ஒரு நாள் ஏசாவை அழைத்து அவனை வனத்துக்குப் போய் வேட்டையாடி ஒரு மான் சுட்டுக்கொண்டு வரும்படியாகச் சொன்னான். (ஈசாக்கின் கண்கள் முதிர் வயதினால் இருளடைந்து பார்வை மங்கிப் போயிற்று). அதைத் தனக்குப் பிரியமான ருசியுள்ள பதார்த்தங்களாகச் சமைத்துக்கொண்டு வந்தால் அதைச் சாப்பிட்டு விட்டு ஏசாவுக்கு ஓர் விசேஷித்த ஆசீர்வாதம் கொடுப்பதாகச் சொன்னான் ரெபேக்காள் இவ்வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருந்து, ஏசா போன பிற்பாடு யாக்கோபைக் கூப்பிட்டு ஆட்டு மந்தைக்குப் போய் இரண்டு நல்ல வெள்ளாட்டுக் குட்டிகளைக் கொண்டு வா, நான் அவைகளை உன் தகப்பனுக்குப் பிரியமானபடி சமைத்துத் தருகிறேன் என்றாள். யாக்கோபு அதைக் கொண்டுபோய் தன் தகப்பனுக்குக் கொடுத்து, அவன் ஏசாவுக்குக் கொடுக்க விருந்த ஆசீர்வாதத்தை வஞ்சகமாய்ப் பெற்றுக் கொள்ளும்படி ஏற்பாடு பண்ணினான். அப்படியே யாக்கோபு ஆட்டு மந்தையிலிருந்து இரண்டு

வெள்ளாட்டுக் குட்டிகளைக் கொண்டுவர, அவன் தாய் அதை ருசியுள்ள பதார்த்தமாகச் சமைத்தாள். ஆனால் யாக்கோபு அதைத் தன் தகப்பனிடம் கொண்டு போகப் பயந்தான். ஏசா ரோமமுள்ளவனா யிருந்ததால், ஈசாக்கு தன்னைத் தடவிப் பார்த்து வித்தியாசம் கண்டுபிடித்து விடுவா னென்று நினைத்தான். ரெபேக்காள் ஏசாவின் வஸ்திரங் களி லொன்றை யாக்கோபுக்கு உடுத்தி வெள்ளாட்டுக் குட் டியின் தோலை அவன் கைகளிலேயும் கழுத்திலேயும் போட்டாள். அப்போது யாக்கோபு தன் தாயார் சமைத் தவைகளைக் கொண்டுபோய்த் தன் தகப்பனுக்குக் கொடுத் தான்.

நீ யார் என்று ஈசாக்கு அவனைக்கேட்டதற்கு "நான் உமது மூத்த குமாரனாகிய ஏசா" என்று சொன்னான். அதற்கு ஈசாக்கு நீ என் குமாரனாகிய ஏசாதானோ அல் லவோ என்று நான் உன்னைத் தடவிப் பார்க்கும்படி கிட்ட வா என்றான். யாக்கோபு தன் கையிலும் கழுத்திலும் போட்டிருந்த ரோமத்தை ஈசாக்கு தடவிப் பார்த்து யாக் கோபு உடுத்தி யிருந்த ஏசாவின் வஸ்திரத்தையும் மோர் ந்து பார்த்து அவனை ஏசா என்று நம்பி அவனுக்குச் சொல்லியிருந்த விசேஷித்த ஆசீர்வாதத்தைக் கூறினான்.

ஈசாக்கு யாக்கோபை ஆசீர்வதித்துச் சிறிது நேரம் சென்றவுடனே ஏசா வேட்டையாடிக் கொண்டு வந்து, அதை ருசியுள்ள பதார்த்தமாய்ச் சமைத்துத் தன் தகப்ப னிடம் கொண்டுபோய்க் கொடுத்து தன்னை ஆசீர்வதிக்கும் படிக் கேட்டான்.

அவன் தகப்பனாகிய ஈசாக்கு " நீ யார் என்றான். அத ற்கு அவன் நான் உமது மூத்த மகனாகிய ஏசா என்றான்."

ஏசா தன் சகோதரனால் வஞ்சிக்கப் பட்டதைக் கேட்ட போது சத்தமிட்டு அழுது தன்னையும் ஆசீர்வதிக்கும் படியாகத் தன் தகப்பனைக் கேட்டான். அதற்கு ஈசாக்கு "உன் சகோதரன் தந்திரமாய் வந்து உன்னுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டான் என்றான்" அதற்கு ஏசா "என் தகப்பனே இந்த ஒரே ஆசீர்வாதம் மாத்திரமா உம்மிடத்தில் உண்டு. என்னையும் ஆசீர்வதியும் என்று சத்தமிட்டு அழுதான்" ஈசாக்கு ஏசாவையும் ஆசீர்வதித்தான்.

அது முதல் ஏசா யாக்கோபை மிகவும் பகைத்து, தன் தகப்பன் மரித்த பிறகு அவனைக் கொன்று போடுவதாகத் தன் இருதயத்தில் ஏற்பாடு செய்திருந்தான்.

ரெபேக்காள் ஏசாவின் கோபத்திற்குப் பயந்து, அவனுடைய கோபம் தணியுமட்டும் யாக்கோபை ஆரானுக்கு ஓடிப்போய் தன் சகோதரனாகிய லாபானின் வீட்டிலே இருக்கும்படியாகத் தூண்டினாள். யாக்கோபைச் சீக்கிரத்திலே திரும்பவும் தன்னண்டைக்கு அழைத்துக் கொள்ளலாமென்று ரெபேக்காள் நினைத்தாள். ஆனால் அவன் ஆரானுக்குப் போன பிறகு அவள் அவனைத் திரும்பப் பார்க்கவேயில்லை. ஈசாக்கை மோசம் பண்ணினதினால் வந்த பலாபலன்களில் இது ஒன்று.

கேள்விகள்.

1. ஈசாக்கு முதிர் வயதானபோது ஏசாவை என்ன கேட்டுக்கொண்டான்?

2. இப்படிக் கேட்டுக் கொண்டதற்குக் காரண மென்ன ?

3 இந்த சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டிருந் தது யார் ? ஏசா போன பின்பு அவள் என்ன ஏற்பாடு செய்தாள் ?

4. சமையல் தயாரான வுடனே யாக்கோபு ஏன் அதைத் தன் தகப்பனிடம் கொண்டுபோகப் பயந்தான் ?

5. அதற்கு ரெபேக்காள் என்ன உபாயம் செய் தாள் ?

6. ஈசாக்கு யாக்கோபை நீயார் என்றதற்கு அவன் என்ன பதில் சொன்னான் ?

7. அப்போது ஈசாக்கு என்ன சொன்னான் ?

8. புசித்த பின்பு ஈசாக்கு யாக்கோபுக்கு என்ன ஆசிர்வாதம் கொடுத்தான் ?

9. ஏசா வேட்டையாடித் திரும்பி வந்து என்ன செய்தான் ?

10. தன் சகோதரன் செய்த வஞ்சகத்தைக் கேட்டு, தன் தகப்பனிடத்தில் என்ன வேண்டுதல் செய் தான் ?

11. ஏசா மிகவும் அழுததினால் ஈசாக்கு என்ன செய்தான் ?

12. பிறகு யாக்கோபின் பேரில் ஏசா எப்படி யிருந் தான் ?

13. என்ன ஏற்பாடு செய்திருந்தான் ?

14. அதற்கு ரெபேக்காள் யாக்கோபுக்குச் சொன்ன யோசனை என்ன?

15. இப்படி வஞ்சித்ததினால் வந்த தீமை என்ன?

16-ம் பாடம்.

யாக்கோபின் பிரயாணம்.

மனப்பாடம்: "இது தேவனுடைய வீடேயல்லாமல் வேறல்ல இது வானத்தின் வாசல்" ஆதி. 28 : 17.

யாக்கோபு தன்னைச்சுற்றிலு மிருந்த அஞ்ஞான ஜனங்களிலே தனக்கு பெண்ணைக் கொள்வானென்று ரெபேக்காள் பயப்பட்டாள். ஆகையால் ஈசாக்கு அவனை ஆரானுக்கு அனுப்பி ரெபேக்காளின் சகோதரனாகிய லாபானின் குமாரத்திகளில் ஒரு பெண்ணை விவாகம் செய்து கொள்ளும்படி யோசனை சொன்னான். அப்படியே யாக்கோபு பெயெர்செபாவிலிருந்து புறப்பட்டு ஆரானுக்குப் பிரயாணம் போனான். அவன் போகையில் ஓரிடத்திற்கு வந்தபோது சூரியன் அஸ்தமித்தபடியால் அங்கே இராத் தங்கத் தீர்மானித்தான். சிலகற்களை யெடுத்துத் தலைமாட்டில் வைத்துக்கொண்டு நித்திரை செய்யப் படுத்துக் கொண்டான். அவன் நித்திரை செய்கையில் ஒரு சொப்பனங் கண்டான். "ஏதோ ஒரு ஏணி பூமியில் வைக்கப்பட்டிருந்தது. அதின் நுனி வானத்தை எட்டியிருந்தது. அதிலே தேவதூதர் ஏறுகிறவர்களும் இறங்குகிறவர்களுமா யிருந்தார்

கள்." அதற்கு மேலாகக் கர்த்தர் நின்று அவனோடு சென்று அவனை ஆசிர்வதிப்பதாக வாக்களித்தார். மேலும் ஆபிரகாமோடும், ஈசாக்கோடும் செய்த உடன்படிக்கையைப் புதுப்பித்து, "நீ படுத்திருக்கிற பூமியை உனக்கும் உன் சந்ததிக்கும் தருவேன்" என்று சொன்னார்.

யாக்கோபு நித்திரை தெளிந்து எழுந்தபோது "மெய்யாகவே கர்த்தர் இந்தஸ்தலத்திலிருக்கிறார். இதை நான் அறியாதிருந்தேன்" என்றான். அதிகாலையில் யாக்கோபு எழுந்து தன் தலையின் கீழ் வைத்திருந்த கல்லை யெடுத்து அதைத்தூணாக நிறுத்தி அதின்மேல் எண்ணெய் வார்த்து அந்தஸ்தலத்திற்குப் பெத்தேல் என்று பெயரிட்டான். அதின் அர்த்தம் "தேவனுடைய வீடு."

இந்த ஆச்சரியமான சொப்பனத்தினால் யாக்கோபு எழுப்புதலடைந்து "தேவன் என்னோடே இருந்து நான் போகிற இந்த வழியிலே என்னைக் காப்பாற்றி உண்ண ஆகாரமும் உடுக்க வஸ்திரமும் எனக்குத் தந்து என்னை என் தகப்பன் வீட்டுக்குச் சமாதானத்தோடே திரும்பி வரப்பண்ணுவாரானால் கர்த்தர் எனக்கு தேவனாயிருப்பார்........தேவரீர் எனக்குத் தரும் எல்லாவற்றிலும் உமக்குத் தசம பாகம் செலுத்துவேன்" என்று பொருத்தனை பண்ணிக்கொண்டான்.

யாக்கோபு பிரயாணம் பண்ணி கீழ்த்திசையாரின் தேசத்தில் போய்ச் சேர்ந்தான். அங்கே வயல் வெளியில் ஒரு கிணற்றையும் அதினருகே ஆட்டு மந்தைகளையும் கண்டான். யாக்கோபு மேய்ப்பரைப் பார்த்து நீங்கள் எவ்விடத்தார் என்றான். அவர்கள் நாங்கள் ஆரான் ஊரார் என்றார்கள். அவன் தன் மாமனாகிய லாபானைப்பற்றி விசா

ரித்தான். அதற்கு அவர்கள், லாபானின் குமாரத்தியாகிய ராகேல் சீக்கிரத்தில் கிணத்துக்குவருவாள் என்றார்கள். அவள் வந்தபோது யாக்கோபு தன்னை இன்னானென்று அவளுக்குத் தெரிவித்து அவளோடு அவன் வீட்டுக்குப் போனான். அங்கே வீட்டார் எல்லாரும் அவனைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டார்கள்.

கேள்விகள்.

1. ஈசாக்கு யாக்கோபை ஆரானுக்கு ஏன் அனுப்பினான்?

2 அவன் பிரயாணம் செய்த முதல் இரவில் எங்கே நித்திரை செய்தான்?

3. நித்திரை செய்ய என்ன ஆயத்தம் பண்ணினான்?

4. அப்போது கண்ட சொப்பனம் என்ன?

5. கர்த்தர் யாக்கோபுக்கு என்ன வாக்குத்தத்தம் பண்ணினார்? எந்த உடன் படிக்கையைப் புதுப்பித்தார்?

6. யாக்கோபு அதிகாலையில் எழுந்து என்ன சொன்னான்?

7. அங்கிருந்து புறப்படு முன் என்ன செய்தான்?

8. அவ்விடத்திற்கு என்ன பேரிட்டான், அதின் அர்த்த மென்ன?

9. தன் நன்றியறிதலுக்கு அடையாளமாக என்ன பிரதிக்கினை செய்தான்?

10. கடைசியாக எவ்விடத்திற்கு வந்து சேர்ந்தான்?

11. அங்கிருந்த மேய்ப்பரை என்ன கேட்டான்?

12. அவர்கள் என்ன பதில் சொன்னார்கள்?

13. ராகேல் அங்கே வந்தபோது நடந்ததென்ன?

14. வீட்டில் அவனை எப்படி நடத்தினார்கள்?

17-ம் பாடம்.

யாக்கோபு லாபான் வீட்டிலிருந்தது.

மனப்பாடம்: "நீ இரு, உன் நிமித்தம் கர்த்தர் என்னை ஆசீர்வதித்தாரென்று குறிப்பினால் அறிந்தேன்." ஆதி. 30 : 27.

லாபானுக்கு இரண்டு குமாரத்திகள் இருந்தார்கள். மூத்தவள் பேர் லேயாள், இளையவள் ராகேல். ராகேல் அதிக அழகுள்ளவளாயிருந்தபடியால் துவக்கமுதல் யாக்கோபு அவளை அதிகமாய் நேசித்தான் ராகேலைத் தனக்குப் பெண்சாதியாகக் கொடுக்கிறதானால், தான் லாபானிடத்தில் ஏழு வருஷம் தங்கி ஊழியஞ் செய்வதாக ஒப்புக்கொண்டான். ஏழு வருஷம் முடிந்தபோது லாபான் ஒரு விருந்து பண்ணி கலியாணத்திற்கு எல்லாரையும் அழைத்தான். கலியாண சடங்கில் ராகேலுக்கு பதிலாக லேயாளை

யாக்கோபுக்குப் பெண்சாதியாகக் கொடுத்தான். அப்போது யாக்கோபு, ஏன் எனக்கு வஞ்சனை பண்ணினீர் என்று லாபானைக் கேட்டதற்கு, அவன், நீ இன்னும் ஏழு வருஷம் ஊழியம் செய்யச் சம்மதித்தால் ராகேலையும் உனக்கு மனைவியாகத்தருகிறேன் என்றான். இன்னும் ஏழு வருஷம் யாக்கோபு லாபானோடிருந்தான். அக்காலத்திற்காக அவன் லாபானிடமிருந்து சம்பளம் பெற்றுக்கொள்ளவில்லை.

சில வருஷம் சென்றபிறகு யாக்கோபு தன் பெண்சாதிகளையும் பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு தன் சொந்த தேசத்திற்குப்போக லாபானிடம் உத்தரவு கேட்டான். அதற்கு லாபான், உன் சம்பளம் இன்னதென்று எனக்குச் சொல், நான் அதைத் தருவேன் என்றான். புள்ளியும் வரியும் கறுப்புமுள்ள செம்மறியாடுகளையும், வரியும் புள்ளியுமுள்ள வெள்ளாடுகளையும் எனக்குச் சம்பளமாகக் கொடுத்தால் நான் உம்முடைய மந்தையைத் திரும்ப மேய்ப்பேன் என்று யாக்கோபு சொன்னான். கர்த்தர் யாக்கோபை ஆசீர்வதித்து அவனுடைய மந்தைகளைப் பெருகும்படிச் செய்து அவனுக்கு வேலைக்காரரையும் வேலைக்காரிகளையும் ஒட்டகங்களையும் கழுதைகளையும் கொடுத்தார்.

யாக்கோபுக்கு உண்டான ஐசுவரியத்தைப் பார்த்து லாபான் பொறாமை கொண்டு அவனுக்கு நல்ல முகம் காண்பியாதிருந்தான். ஆகையால் யாக்கோபு, லாபான் தனக்குத் தீமை செய்வானென்று பயந்து தன் பெண்சாதி பிள்ளைகளையும் வேலைக்காரரையும் மந்தைகளையும் கூட்டிக் கொண்டு தன் சொந்த தேசத்திற்குப் போகத் தீர்மானித்தான். ஒரு நாள் லாபான் தன் ஆடுகளை மயிர் கத்தரிக்கப் போனபோது, யாக்கோபு தனக்கு உண்டானவைகளையெல்

லாம் சேர்த்துக்கொண்டு தன் சொந்த தேசத்துக்குப் புறப்பட்டான். லாபானும் அவனுடைய தோழர்களும் அவனைத் தொடர்ந்து போய் கிலேயாத் மலையிலே அவனைக் கண்டு பிடித்தார்கள், தேவன் லாபானுக்குச் சொப்பனத்தில் தோன்றி யாக்கோபுக்குத் தீங்கு ஒன்றும் செய்யாதபடி எச்சரித்தார்.

ஏன் எனக்குத்தெரிவியாமல் திருட்டளவாய் ஓடிவந்தாயென்று லாபான் யாக்கோபைக் கேட்டதற்கு, "உம்முடைய குமாரத்திகளைப் பலவந்தமாய்ப் பிடித்து வைத்துக் கொள்ளுவீரென்று அஞ்சினதினால் இப்படி வந்து விட்டேன்" என்றான்.

கர்த்தர் லாபானுடைய இருதயத்தை இளகச் செய்தார். அவர்கள் ஒருவரோடொருவர் சிநேக உடன்படிக்கை செய்து கொண்டு ஒரு பலிபீடத்தைக்கட்டி பலி செலுத்தினார்கள். பிறகு அவர்களெல்லாரும் அப்பம் புசித்து இரவெல்லாம் மலையிலே தங்கி யிருந்தார்கள். அதிகாலையில் லாபான் யாக்கோபைச் சமாதானமாய் பிரயாணப்படுத்தி விட்டுப் புறப்பட்டுப்போனான்.

கேள்விகள்.

1. லாபானுக்கு எத்தனை குமாரத்திகள்? அவர்கள் பேர் என்ன?

2. இளைய மகளை யாக்கோபு எப்படி மதித்தான்?

3. அவளைப்பற்றி லாபானோடு என்ன ஒப்பந்தம் செய்தான்?

4. ஒப்பந்த காலம் முடிந்த போது லாபான் என்ன வஞ்சனை செய்தான்?

5. அப்படி வஞ்சித்ததினால் இன்னும் என்ன ஒப்பந்தம் செய்யப்பட்டது?

6. சில வருஷம் சென்று யாக்கோபு லாபானை என்ன கேட்டுக் கொண்டான்?

7. என்ன சம்பளம் கொடுப்பதாக ஏற்பாடாயிற்று?

8 கர்த்தர் யாக்கோபை எவ்வளவாய்ப் பெருகப்பண்ணினார்?

9. அதினால் லாபானுக்கு அவன் மேல் என்ன உண்டாயிற்று?

10. லாபான் ஆடுகளை மயிர் கத்தரிக்கப் போயிருந்த போது யாக்கோபு என்ன செய்தான்?

11. லாபான் அவனை எங்கே கண்டு பிடித்தான்?

12. கர்த்தர் லாபானை எப்படி எச்சரித்தார்?

13. லாபான் இருதயம் இளகினபடியால் யாக்கோபோடு என்ன உடன்படிக்கை பணணிக்கொண்டான்?

14. அந்த உடன்படிக்கை எப்படி உறுதிப்படுத்தப்பட்டது?

15. லாபானும் யாக்கோபும் என்ன மனதோடு பிரிந்து போனார்கள்?

18-ம் பாடம்.

யாக்கோபு தன் தகப்பன் வீட்டிற்குத் திரும்பினது.

மனப்பாடம்: "உன் பேர் இனி யாக்கோபு என்னப்படாமல் இஸ்ரவேல் என்னப்படும். தேவனோடும் மனிதரோடும் போராடி மேற்கொண்டாய்" ஆதி. 32: 28.

யாக்கோபு பிரயாணம் பண்ணி ஏசா குடியிருந்த தேசத்திற்குச் சமீபித்தபோது தன் ஆட்களை அனுப்பி, தானும் தன் குடும்பத்தாரும் ஆடு மாடுகளும் அவன் தேசத்தின் வழியாய்ச் செல்ல உத்தரவு கேட்டான். அந்த ஆட்கள் திரும்பி வந்து ஏசா நானூறு பேரோடு உம்மைச் சந்திக்க வருகிறானென்று அறிவித்தார்கள். யாக்கோபு இதைக்கேட்டு மிகவும் பயந்து தன் ஜனங்களையும் மிருகஜீவன்களையும் இரண்டு பகுதியாய்ப் பிரித்து, ஒரு பகுதி ஏசாவின் கையில் அகப்பட்டுக் கொண்டால் மறுபகுதியாகிலும் தப்பும் என்று நினைத்தான். மேலும் ஏசாவின் கைக்குத் தன்னைத் தப்புவிக்கும்படியாகக் கர்த்தரை மன்றாடினான். அதே இரவில் தன் மந்தைகளிலிருந்து பற்பல மிருகஜீவன்களைப்பிரித் தெடுத்து அவற்றை ஏசாவுக்கு வெகுமதியாக முன்னே அனுப்பினான்.

ஏசாவுக்கு வெகுமதிகளை முன்னே அனுப்பி விட்டு, தன் பெண்சாதி பிள்ளைகளையும் யாப்போக்கு என்னும் ஆற்றைக் கடக்கச்செய்து தான் மாத்திரம் தனித்திருந்தான். தன் பாவங்களை மன்னிக்கும் படியாகவும், ஏசாவின் கோபத்தைத் தணியப் பண்ணும்படியாகவும் தேவனை

நோக்கி ஜெபித்தான். அவன் வனாந்தரமும் மலை நாடுமா யிருந்த அந்த இடத்திலே ஜெபம் செய்ய முழங்கால் படி யிட்டபோது ஒரு கை அவனைப்பிடித்தது. யாரோ சத்துரு தனக்குத் தீங்கு செய்யும்படியாகத் தன்னைப்பிடிக்கிறு னென்று நினைத்து போராடத் தொடங்கினன். அவன் தன் பலத்தை யெல்லாம் கூட்டிப் பொழுது விடிகிற வரை யில் போராட்டம் செய்தான். அப்போது யாக்கோ போடே போராடினவர் தன் விரலினுல் யாக்கோபின் தொடைச்சந்தைத் தொட்டார். உடனே அது சுளுக் கிற்று. யாக்கோபு தான் பரமதூதரோடு போராடுவதாக அப்போது அறிந்து, தன் சகோதரனை வஞ்சித்த பாவத்தை மன்னித்துத் தன்னை ஆசிர்வதிக்கும்படியாக வேண்டிக்கொண்டான். அப்போது கர்த்தர் அவனை நோக்கி "உன் பேர் இனி யாக்கோபு என்னப்படாமல் இஸ்ரவேல் என்னப்படும். தேவனேடும் மனிதரோடும் போராடி மேற்கொண்டாயே என்ருர். அப்பொழுது யாக் கோபு: நான் தேவனை முகமுகமாய்க் கண்டேன். உயிர் தப்பிப் பிழைத்தேன் என்று சொல்லி அந்த ஸ்தலத்துக்கு பெனியேல் என்று பேரிட்டான்."

யாக்கோபு செய்த வஞ்சகம் அவனுக்கு மன்னிக்கப் பட்டது. அவன் தொடைச்சந்து சுளுக்கி நொண்டி நடந்தாலும் அவன் இருதயத்தில் சமாதானம் வந்தது. தேவன் சொப்பனத்தில் ஏசாவை எச்சரித்து, யாக்கோ புக்கு ஒரு தீங்கும் செய்யாதே. கர்த்தர் அவனேடிருக்கி ருர் என்று சொன்னர். யாக்கோபும் ஏசாவும் சந்தித்த போது ஒருவரை யொருவர் தழுவிக்கொண்டு சிநேகமானர் கள். யாக்கோபு கொடுத்த வெகுமதிகளை ஏசா பெற்றுக் கொண்டான். யாக்கோபு தன் மந்தைகளையும் பிள்ளைகளை

யும் மெதுவாய் நடத்திக்கொண்டு சேயீருக்கு வருவதாகச் சொன்னான். அப்படியே யாக்கோபு தன் தகப்பன் வீட்டிற்கும் தன் சொந்த தேசத்திற்கும் திரும்பிப்போய் கானான் தேசத்தில் குடியிருந்தான்.

கேள்விகள்.

1. யாக்கோபு ஏசாவின் தேசத்திற்குச் சமீபித்த போது என்ன உத்தரவு கேட்டான்?

2. ஆட்கள் திரும்பி என்ன செய்திகொண்டு வந்தார்கள்?

3. இந்தச்செய்தி யாக்கோபுக்கு எப்படி யிருந்தது? அவன் என்ன ஏற்பாடு செய்தான்?

4. ஏசாவுக்கு என்ன வெகுமதி அனுப்பினான்?

5. வெகுமதி அனுப்பிவிட்டுத் தன் பெண்சாதி பிள்ளைகளை என்ன செய்தான்?

6. தான் மாத்திரம் ஏன் தனியே தங்கினான்?

7. அவன் ஜெபம் செய்தபோது சம்பவித்ததென்ன?

8. யாக்கோபு எவ்வளவு நேரம் போராடினான்?

9. பொழுது விடிகிற நேரத்தில், யாக்கோபோடு போராடினவர் என்ன செய்தார்?

10. அப்பொழுது அவர் யார் என்று அறிந்து கொண்டான்?

11. அவன் வருந்திக்கேட்டபோது என்ன ஆசீர்வாதம் கொடுத்தார்?

12 அந்த இடத்திற்கு யாக்கோபு என்ன பெயர் கொடுத்தான்? ஏன்?

13. ஏசாவை தேவன் எப்படி எச்சரித்தார்?

14. யாக்கோபும் ஏசாவும் எவ்விதமாய் சந்தித்துக் கொண்டார்கள்?

15. அது முதல் யாக்கோபு எங்கே குடியிருந்தான்?

19-ம் பாடம்.

யோசேப்பின் பாலியம்.

மனப்பாடம். "இஸ்ரவேலின் முதிர்வயதில், யோசேப்பு தனக்குப் பிறந்ததினால் இஸ்ரவேல் தன் குமாரர் எல்லாரிலும் அவனை அதிகமாய் நேசித்தான்" ஆதி. 37: 3.

ராகேலின் மகனாகிய யோசேப்பை யாக்கோபு தன் எல்லாப்பிள்ளைகளிலும் அதிகமாய் நேசித்தான். ஏனென்றால் அவன் தனக்கு முதிர் வயதில் பிறந்தவன். அவன் யோசேப்புக்குப் பல வருணமான அங்கியைச் செய்து கொடுத்தான். இப்படி எல்லாரிலும் அதிகமாக யாக்கோபு அவனை நேசித்ததினால் அவன் சகோதரர் அவனைப் பகைத்தார்கள்.

ஒரு நாள் இரவு யோசேப்பு ஒரு சொப்பனங்கண்டு அதைத் தன் சகோதரருக்கு அறிவித்தான். அதாவது: "நாம் வயலில் அறுத்த அரிகளைக் கட்டிக் கொண்டிருந்தோம். அப்பொழுது என்னுடைய அரிக்கட்டு நிமிர்ந்திருந்தது. உங்கள் அரிக்கட்டுகள் என் அரிக்கட்டைச்

சுற்றி வணங்கி நின்றது என்றான்." இதற்குப்பிறகு சூரியனும் சந்திரனும் பதினொரு நட்சத்திரங்களும் தன்னை வணங்கினதாகவும் ஒரு சொப்பனம் கண்டான். இவைகளினால் அவன் சகோதரர் அவன் மேல் அதிக பொறாமையானார்கள்.

யாக்கோபின் மூத்த குமாரர்கள் சீகேமிலே ஆடுகளை மேய்க்கப் போயிருந்தார்கள். அவர்களுடைய க்ஷேமத்தைப்பற்றி அறிய யாக்கோபு விரும்பினதினால் அவர்களைப் பார்த்து வந்து தனக்குச் செய்தி தெரிவிக்கும்படியாக யோசேப்பை அனுப்பினான். யோசேப்பு சீகேமுக்குப் போயும் அவர்களை அங்கே காணவில்லை. அவர்களைப்பற்றி அங்கே விசாரித்துத் தேடிப்போய் தோத்தானிலே கண்டு பிடித்தான். அவர்கள் அவனைத் தூரத்திலே வரக்கண்டு அவனைக்கொலை செய்யும்படி யோசனை பண்ணினார்கள். "இதோ சொப்பனக்காரன் வருகிறான். நாம் அவனைக் கொன்று இந்தக் குழிகள் ஒன்றிலே அவனைப்போட்டு ஒரு துஷ்ட மிருகம் அவனைப்பட்சித்தது என்று சொல்லுவோம் வாருங்கள். அவனுடைய சொப்பனம் எப்படி முடியும் பார்ப்போம் என்றார்கள்." மூத்த குமாரனாகிய ரூபன் பட்சமான இருதயமுள்ளவனாயிருந்து தன் சகோதரரை நோக்கி நாம் அவனைக் கொல்லாமல் வனாந்தரத்திலிருக்கிற குழிகள் ஒன்றில் அவனைப் போட்டு விடுவோம் என்றான். பிறகு யோசேப்பைக் குழியிலிருந்து எடுத்து அவன் தகப்பனிடத்திற்கு அனுப்பிவிடலாமென்று ரூபன் நினைத்திருந்தான். அவன் சகோதரர் யோசேப்பை ஒரு குழியிலே போட்டுவிட்டுச் சாப்பிட உட்கார்ந்தார்கள். அவர்கள் சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் மீதியானியரின் வர்த்தகக் கூட்டம் ஒன்று சரக்குகள் விற்கும்படி எகிப்திற்

குப்போக அவ்வழியாய்ச் சென்றது. யோசேப்பின் சகோதரர் அந்த வியாபாரிகளிடத்தில் அவனை விற்றுப் போடத் தீர்மானித்து, அவனைக்குழியிலிருந்து எடுத்து இருபது வெள்ளிக்காசுக்கு விற்றுப்போட்டார்கள். யோசேப்பின் அங்கியை எடுத்து ஒரு வெள்ளாட்டை அடித்து அதின் இரத்தத்தில் தோய்த்தார்கள். அதை அவன் தகப்பனிடத்தில் கொண்டுபோய் ஏதோ ஒரு காட்டு மிருகம் அவனை விழுங்கியிருக்கும் என்றார்கள்.

யாக்கோபு தன் குமாரன் யோசேப்புக்காக அநேக நாள் துக்கங்கொண்டாடினான். அவனை ஆறுதல் படுத்தப் பார்த்தும் அதற்கு இடங்கொடாமல் "நான் துக்கத்தோடே என் குமாரனிடத்தில் பாதாளத்தில் இறங்குவேன் என்றான்."

கேள்விகள்.

1. யாக்கோபு தன் குமாரர் எல்லாரிலும் யாரை அதிகமாய் நேசித்தான்? ஏன்?

2 அதிகமாய் நேசித்ததினால் அவனுக்கு என்ன கொடுத்தான்?

3. அது அவன் சகோதரருக்கு எப்படியிருந்தது?

4. யோசேப்பு கண்ட இரண்டு சொப்பனங்களைச் சொல்லு?

5. இவைகளை யாருக்கு அறிவித்தான்? அவர்கள் அதைப்பற்றி என்ன நினைத்தார்கள்?

6. யாக்கோபு யோசேப்பை எங்கே அனுப்பினான்? எதற்காக அவனை அனுப்பினான்?

7. அவன் சகோதரர் அவன் வருவதைக் கண்டு என்ன ஏற்பாடு பண்ணினார்கள்?

8. ரூபன் என்ன யோசனை சொன்னான்? அவன் மனதில் என்ன நினைத்து இந்தப்படி சொன்னான்?

9. அவன் சகோதரர் யோசேப்பைக் குழியில் போட்டுவிட்டு என்ன செய்தார்கள்?

10. அவர்கள் சாப்பிடும்போது யார் சமீபித்தது?

11. யோசேப்பைக் குழியிலிருந்து எடுத்து என்ன செய்தார்கள்?

12. என்ன விலைக்கு அவனை விற்றார்கள்?

13. யாக்கோபின் குமாரர் தாங்கள் செய்த இந்தப் பாதகத்தை எப்படி மறைத்தார்கள்?

14. யாக்கோபு இதைக் கேள்விப்பட்டபோது அவனுக்கு எப்படியிருந்தது?

20-ம் பாடம்.

யோசேப்பின் தேவபக்தி

மனப்பாடம் "கர்த்தர் யோசேப்போடே இருந்து அவன்மேல் கிருபைவைத்து சிறைச்சாலைத் தலைவனுடைய தயவு அவனுக்குக் கிடைக்கும்படிச் செய்தார்." ஆதி 39: 21.

மீதியானிய வர்த்தகர் எகிப்துக்குப் போனபோது யோசேப்பை ராஜாவின் பிரதானியாகிய போத்திப்பார் என்பவனிடம் விற்றுப் போட்டார்கள். கர்த்தர் அவ

னோடிருந்து அவன் காரியங்களையெல்லாம் வாய்க்கப்பண்ணினார். போத்திப்பார் இதை அறிந்து அவனைத் தன் வீட்டிற்கு விசாரணைக்காரனாக்கினான். தனக்கு உண்டான யாவையும் அவன் கையில் ஒப்புவித்தான். ஒரு நாள் போத்திப்பாரின் பெண்சாதி யோசேப்பைப் பாவம் செய்யத் தூண்டினாள். ஆனால் அவன் அதற்கு இணங்காமல் "நான் இத்தனை பெரிய பொல்லாங்குக்கு உடன்பட்டு தேவனுக்கு விரோதமாய்ப் பாவம் செய்வது எப்படி என்றான்." யோசேப்பு பாவத்திற்கு இணங்காததைக் கண்டு அவள் அவனுக்கு விரோதமாகத் தன் புருஷனிடத்தில் பொய் சொன்னாள். அவன் யோசேப்பின்மேல் கோபமடைந்து அவனைக்காவலில் வைக்கப்பட்டவர்கள் இருக்கும் சிறைச்சாலையில் போட்டான். கர்த்தரோ யோசேப்போடே இருந்து சிறைச்சாலைத் தலைவனுடைய தயவு அவனுக்குக் கிடைக்கும்படிச் செய்தார். அவன், சிறைச்சாலையில் வைக்கப்பட்ட யாவரையும் யோசேப்பின் கையில் ஒப்புவித்தான். யோசேப்பு செய்வதையெல்லாம் கர்த்தர் வாய்க்கப் பண்ணினார்,

பார்வோன் தன் பான பாத்திரக்காரன் மேலும் சுயம்பாகியின் மேலும் கோபங்கொண்டு அவர்களை யோசேப்பு இருந்த சிறைச்சாலையில் போட்டான். சிறைச்சாலையில் அதிபதி அவர்களை யோசேப்பினிடம் ஒப்புவித்தான். ஒரு நாள் இராத்திரி ராஜாவின் இவ்விரண்டு வேலைக்காரரும் சொப்பனங்கண்டு அதின் அர்த்தம் இன்னதென்று அறியாதிருந்தார்கள். காலமே யோசேப்பு அவர்கள் முகம் துக்கமாயிருக்கிறதைக்கண்டு காரணம் என்னவென்று விசாரித்தான். அதற்கு அவர்கள் "சொப்பனங்கண்டோம் அதற்கு அர்த்தம் சொல்லுகிறவன் ஒருவனுமில்லை

என்றார்கள்" அதற்கு யோசேப்பு "சொப்பனத்துக்கு அர்த்தம் சொல்லுதல் தேவனுக்குரியது அல்லவா? அவைகளை என்னிடத்தில் சொல்லுங்கள் என்றான்"

பானபாத்திரத்தலைவன் "ஒரு திராட்சச்செடி எனக்கு முன்பாக இருக்கக் கண்டேன். அதில் மூன்று கொடிகள் இருந்தது. அது துளிர்க்கிறதா யிருந்தது. அதில் பூக்கள் மலர்ந்திருந்தது. அதின் குலைகள் பழுத்த பழங்களா யிருந்தது. பார்வோனுடைய பாத்திரம் என் கையி லிருந்தது. நான் அந்தப் பழங்களைப் பறித்து அவைகளைப் பார்வோனுடைய பாத்திரத்தில் பிழிந்து அதைப் பார்வோனுடைய கையில் கொடுத்தேன்" என்று சொன்னான். யோசேப்பு அதின் அர்த்தத்தை விபரித்து, அந்த மூன்று கொடிகளும் மூன்று நாட்கள். மூன்று நாட்களுக்குள்ளே பார்வோன் உன்னை மறுபடியும் பான பாத்திரக்காரரின் தலைவனாக வைப்பான். நீ வாழ்வடைந்திருக்கும் போது என்னை நினைத்து என் காரியத்தைப் பார்வோனுக்கு அறிவித்து இந்த சிறைச்சாலையிலிருந்து என்னை விடுதலையாக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டான்.

அர்த்தம் நன்றாயிருக்கிறதென்று சுயம்பாகிகளின் தலைவன் கண்டு, "என் சொப்பனத்தில் மூன்று வெள்ளைக் கூடைகள் என் தலையின்மேல் இருக்கக் கண்டேன். மேற் கூடையிலே பார்வோனுக்காக சமைக்கப்பட்ட சகல வித பலகாரங்களிலும் கொஞ்சம் கொஞ்சம் இருந்தது. என் தலையின்மேல் கூடையில் இருந்தவைகளைப் பறவைகள் வந்து பட்சித்தது" என்றான். அதற்கு யோசேப்பு அந்த மூன்று கூடைகளும் மூன்று நாள். இன்னும் மூன்று நாளைக்குள் பார்வோன் உன் தலையை உயர்த்தி உன்னை மரத்திலே தூக்கிப் போடுவான் என்றான்.

மூன்றும் நாள் பார்வோனுடைய ஜென்ம நாளாயிருந்தது. தன் ஊழியக்காரர் எல்லாருக்கும் விருந்து பண்ணினுன். யோசேப்பு சொல்லியிருந்தபடியே அன்று பானபாத்திரக்காரரின் தலைவனை உத்தியோகத்தில் மறுபடியும் வைத்தான். சுயம்பாகிகளின் தலைவனையோ தூக்கிப் போட்டான். ஆனாலும் பானபாத்திரக்காரரின் தலைவன் யோசேப்பை நினையாமல் மறந்து விட்டபடியால் யோசேப்பு சிறைச்சாலையிலேயே இருந்தான்.

கேள்விகள்.

1. மீதியானியர் எகிப்துக்குப் போன போது யோசேப்பை என்ன செய்தார்கள்?

2. யோசேப்போடு இருந்தது யார்? போத்திப்பார் அவனிடம் என்னத்தை ஒப்புவித்தான்?

3. யோசேப்பு பாவம் செய்யச் சம்மதியாமையால் எங்கே போடப்பட்டான்?

4. சிறைச்சாலைத் தலைவன் அவனுக்கு என்ன வேலை கொடுத்தான்?

5. பிறகு பார்வோனின் எந்த இரண்டு வேலைக்காரர் சிறையிலடைக்கப் பட்டார்கள்?

6. ஒரு நாள் இராத்திரி அவர்களுக்கு என்ன நடந்தது?

7. யோசேப்பு காலையில் அவர்களை என்ன கேட்டான்?

8. அவர்கள் சொன்ன பதில் என்ன?

9. அதற்கு யோசேப்பு என்ன சொன்னான்?

10. பானபாத்திரக் காரரின் தலைவன் கண்ட சொப்பனத்தைச் சொல்லு?

11. யோசேப்பு அதற்கு என்ன அர்த்தம் சொன்னான்?

12. சுயம்பாகிகளின் தலைவன் கண்ட சொப்பனத்தையும் அதின் அர்த்தத்தையும் சொல்லு?

13. மூன்றாம் நாளில் பானபாத்திரத் தலைவனுக்கும் சுயம்பாகிகளின் தலைவனுக்கும் என்ன நடந்தது?

14. பானபாத்திரத் தலைவன் யோசேப்புக்கு என்ன வாக்குக் கொடுத்திருந்தான்? அவன் அதை நிறைவேற்றினானா?

21-ம் பாடம்.

யோசேப்பு எகிப்தில் முதல் அதிகாரியாக்கப்பட்டது.

மனப்பாடம்: "பார்வோன் தன்னுடைய ஊழியக்காரரை நோக்கி, தேவ ஆவியைப் பெற்ற இந்த மனுஷனைப்போல வேறொருவன் உண்டோ என்றான்." ஆதி. 41 : 38.

இரண்டு வருஷம் சென்ற பிறகு பார்வோன் ஒரு சொப்பனம் கண்டான்: அழகும் புஷ்டியுமான ஏழு பசுக்கள் நதியிலிருந்து ஏறி வந்து புல் மேய்ந்தது. பிறகு அவலட்சணமும் கேவலமுமான வேறே ஏழு பசுக்கள் நதியி

விருந்து ஏறிவந்து நதி ஓரத்தில் மற்ற பசுக்களண்டையில் நின்றது. இந்த கேவலமான பசுக்கள் அழகும் புஷ்டியுமான பசுக்களைப் பட்சித்துப்போட்டது. இப்படி பார்வோன் கண்டு விழித்துக்கொண்டான். மறுபடியும் நித்திரை செய்து, இரண்டாவது ஒரு சொப்பனங்கண்டான்: ஏழு நல்ல கதிர்கள் ஒரே தாளிலிருந்து ஓங்கி வளர்ந்தன. பின்பு சாவியானவைகளான ஏழு கதிர்கள் முளைத்தது. சாவியான கதிர்கள் அந்த ஏழு நல்ல கதிர்களையும் விழுங்கிப்போட்டது. காலமே பார்வோனுடைய மனம் கலக்கங்கொண்டிருந்தது. அப்பொழுது அவன் எகிப்திலுள்ள மந்திரவாதிகளையும் சாஸ்திரிகளையும் அழைப்பித்துத் தன் சொப்பனத்தைச் சொன்னான். ஒருவராலும் அதின் அர்த்தத்தைச் சொல்லக்கூடாமற் போயிற்று. அப்போது பானபாத்திரக்காரரின் தலைவன் யோசேப்பை நினைத்துக்கொண்டு தன் சொப்பனத்தை அவன் எவ்வளவு திட்டமாய் வியார்த்தி செய்தான் என்பதைப்பற்றிப் பார்வோனுக்கு அறிவித்தான். உடனே பார்வோன் யோசேப்பை அழைப்பித்தான். அவனைத் தீவிரமாய்க் காவல் கிடங்கிலிருந்து கொண்டுவந்தார்கள். யோசேப்பு வேறு வஸ்திரந் தரித்துப் பார்வோனிடத்தில் வந்தான்.

பார்வோன் யோசேப்பை நோக்கி, சொப்பனங்களின் அர்த்தத்தைச் சொல்லுவாயென்று நான் உன்னைக் குறித்துக் கேள்விப்பட்டேன் என்றான். அப்பொழுது யோசேப்பு "நான் அல்ல, தேவனே பார்வோனுக்கு மங்களமான உத்தரவு அருளிச்செய்வார் என்றான்." பார்வோன் தான் கண்ட இரண்டு சொப்பனங்களையும் யோசேப்புக்கு அறிவித்தான். யோசேப்பு அதின் பொருளை விடிவிததுச் சொன்னதாவது, "பார்வோனின் சொப்பனம் ஒன்றுதான்.

தேவன் தாம் செய்யப்போகிறது இன்னதென்று பார்வோனுக்கு அறிவித்திருக்கிறார். அந்த ஏழு நல்ல பசுக்களும் ஏழு வருஷமாம். அந்த ஏழு நல்ல கதிர்களும் ஏழு வருஷமாம். சொப்பனம் ஒன்றே அவைகளின் பின் ஏறிவந்த கேவலமும் அவலட்சணமுமான ஏழு பசுக்களும் ஏழு வருஷமாம். கீழ் காற்றினால் தீய்ந்து சாவியான ஏழு கதிர்களும் ஏழுவருஷமாம். இவைகள் பஞ்சமுள்ள ஏழு வருஷமாம்... ....அந்தப் பஞ்சம் தேசத்தைப் பாழாக்கும். வரப்போகிற மகா கொடுமையான பஞ்சத்தால் தேசத்தில் முன்னிருந்த பரிபூரணமெல்லாம் ஒழிந்துபோம். இந்தக் காரியம் தேவனால் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தேவன் இதைச் சீக்கிரத்தில் செய்வார் என்பதையும் குறிக்கும் பொருட்டு இந்தச் சொப்பனம் பார்வோனுக்கு இரட்டித்தது." எகிப்தின் ஞானிகளெல்லாம் வியார்த்தி செய்யக்கூடாதிருந்ததை யோசேப்பு தேவனுடைய உதவியினால் வியார்த்தி செய்தான்.

விவேகமும் ஞானமுமுள்ள ஒரு மனுஷனைத்தேடி அவனை எகிப்து தேசத்தில் அதிகாரியாக ஏற்படுத்தி, பரிபூரணமுள்ள வருஷங்களில் விளையும் விளைச்சல்களைச் சேகரிக்கும்படியாகவும் பஞ்சகாலம் வரும்போது எகிப்தில் தானியம் ஒரு வைப்பாயிருக்கும் படியாகவும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று யோசேப்பு பார்வோனுக்கு யோசனை சொன்னான். இந்த யோசனை பார்வோனுக்கும் அவன் ஊழியக்காரருக்கும் பிரியமாயிருந்தது. அதற்கென்று பார்வோன் யோசேப்பையே தேசத்தின்மேல் முதல் அதிகாரியாயிருக்கும்படித் தெரிந்துகொண்டு, அவனே தேசத்தில் மகா விவேகமும் ஞானமுமுள்ளவனென்றும் தேவனுடைய ஆவி அவனோடிருக்கிறார் என்றும் சொன்னான்.

பார்வோன் தன் சொந்த மோதிரத்தை யோசேப்பின் கையில் போட்டு மெல்லிய வஸ்திரங்களை அவனுக்கு உடுத்தி, தன் இரண்டாம் இரதத்தின் மேல் ஏற்றி, எகிப்து தேச முழுமைக்கும் அவனை அதிகாரியாக்கினான்.

யோசேப்பு பரிபூரணமுள்ள காலங்களில் தேசத்தில் விளைந்த தானியங்களைச் சேகரித்து வைத்தான். பஞ்ச காலம் வந்தபோது எகிப்து தேசத்திலுள்ளவர்களுக்கு மாத்திரமல்ல அதிக பஞ்சமாயிருந்த மற்ற தேசத்தாருக்கும் தானியம் விற்க ஏற்பாடு செய்தான்.

கேள்விகள்.

1. எவ்வளவு காலத்திற்குப்பிறகு பார்வோன் சொப்பனம் கண்டான்?

2. அவன் கண்ட இரண்டு சொப்பனங்களைச் சொல்லு?

3. மறுகாலையில் யாரை அழைப்பித்தான்?

4. இவர்கள் அர்த்தம் சொல்லக்கூடியவர்களா யிருந்தார்களா?

5. அப்போது பானபாத்திரக்காரரின் தலைவன் யாரை நினைத்துக் கொண்டான்?

6. பார்வோன் யோசேப்பை நோக்கி என்ன சொன்னான்?

7. அதற்கு யோசேப்பு அடக்கமாய் சொன்ன பதில் என்ன?

8. பார்வோன் சொப்பனங்களைச் சொன்ன போது யோசேப்பு அவற்றிற்கு என்ன அர்த்தம் சொன்னான்?

9. யோசேப்பு பார்வோனுக்கு என்ன யோசனை சொன்னான் ?

10. யோசேப்பு சொப்பனத்தை வியார்த்தி பண்ணவும், ராஜாவுக்குத் தக்க யோசனை சொல்லவும் எதினால் கூடியவனானான் ?

11. என்னத்திற்காகப் பார்வோன் யோசேப்பை எகிப்தின் மேல் அதிகாரி யாக்கினான் ?

12 யோசேப்பை எவ்விதமாய் கனப்படுத்தினான் ?

13. எகிப்தின் அதிகாரியாக யோசேப்பு செய்த முதல் வேலை என்ன?

14. பஞ்சம் வந்தபோது எவ்வளவு ஏராளமான தானியம் இருந்தது ?

22-ம் பாடம்.

யோசேப்பின் சகோதரர் தானியம் கொள்ள வந்தது.

மனப்பாடம்: "நம்முடைய சகோதரனுக்கு நாம் செய்த துரோகம் நம்மேல் சுமந்தது. அவன் நம்மைக் கெஞ்சி வேண்டிக் கொண்டபோது அவனுடைய மனவியாகுலத்தை நாம் கண்டும் அவனுக்குச்செவி கொடாமற் போனோமே, ஆகையால் இந்த ஆபத்து நமக்கு நேரிட்டது" ஆதி. 42 : 21.

கானான் தேசத்திலே பஞ்சம் வெகு கொடிதாயிருந்தது. எகிப்திலே தானியம் உண்டென்று யாக்கோபு கேள்

விப்பட்டு தாங்கள் சாகாதபடிக்கு அங்கே போய் தானியம் கொள்ளும்படியாக அவன் தன் குமாரருக்குச் சொன்ஞன். அவனுடைய பத்து குமாரர் எகிப்துக்குப் புறப்பட்டுப் போனுர்கள். ஆனல் இளையவனுகிய பென்யமீனுக்கு ஏதாவது மோசம் வருமென்று தகப்பன் அவனை அனுப்பாமல் வீட்டிலேயே வைத்துக் கொண்டான்.

யோசேப்பு தேசத்திலே அதிகாரியாயிருந்து தன்னிடத்தில் தானியம் கொள்ள வந்தவர்களுக்கு விற்றுக் கொண்டிருந்தான். அவன் சகோதரர் வந்தபோது அவன் முன்பாக விழுந்து வணங்கினுர்கள். யோசேப்பு அவர்களைத்தன் சகோதரர் என்று அறிந்தும் அவர்கள் அவ்னை அறியவில்லை. யோசேப்பு அவர்களிடத்தில் கடினமாய்ப்பேசி நீங்கள் எங்கேயிருந்து வந்தீர்கள் என்ருன். கானுன் தேசத்திலிருந்து வந்தோம் என்ருர்கள். யோசேப்பு அவர்களை வேவுகாரர் என்று குற்றஞ்சாட்டினன். அதற்கு அவர்கள் தாங்கள் எல்லாரும் ஒரே தகப்பனுடைய பிள்ளைகள் என்றும் தானியம் வாங்கவந்ததாகவும் சொன்னுர்கள். மேலும் தங்கள் இளைய சகோதரன் தகப்பனேடு வீட்டில் இருப்பதாகவும் அறிவித்தார்கள். அதற்கு யோசேப்பு உங்களில் ஒருவன் போய் இளைய சகோதரனை அழைத்துக்கொண்டுவந்து தங்கள் வார்த்தை உண்மைதான் என்பதை ருசுப்படுத்தும் வரையில் மற்றவர்களெல்லாம் காவலிலிருக்கவேண்டு மென்று சொல்லி அவர்களெல்லாரையும் மூன்று நாள் காவலில் போட்டான். மூன்ரும் நாளிலே அவர்களைப்பார்த்து உங்களில் ஒருவன் காவலில் இருக்கட்டும், மற்ற ஒன்பது பேரும் கானுன் தேசத்துக்குத் திரும்பிப்போய் இளைய சகோதரனை அழைத்துவரலாம் என்ருன். அவர்கள் அப்படியே செய்

யச் சம்மதித்தார்கள். அவர்கள் ஒருவரோடொருவர் "நம்முடைய சகோதரனுக்கு நாம் செய்த துரோகம் நம்மேல் சுமந்தது. அவன் நம்மைக் கெஞ்சி வேண்டிக் கொண்டபோது அவனுடைய மன வியாகுலத்தை நாம் கண்டும் அவனுக்குச் செவி கொடாமற் போனோம், ஆகையால் இந்த ஆபத்து நமக்கு நேரிட்டது" என்று தங்கள் சுய பாஷையில் பேசிக்கொண்டார்கள். அப்போது ரூபன் தான் யோசேப்பைத் தப்புவிக்கும் படியாகப் பிரயாசப்பட்டதையும், தன் வார்த்தைகளுக்கு அவர்கள் செவி கொடாமற் போனதையும் அவர்களுக்கு நினைப்பூட்டினான்.

யோசேப்பு துபாசியைக்கொண்டு அவர்களிடத்தில் பேசினபடியால் தாங்கள் பேசிக் கொள்வது அவனுக்குத் தெரியாதென்று நினைத்தார்கள். யோசேப்போ அவர்கள் பேசினதை யெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தான். அதைக் கேட்டு அவர்களை விட்டு அப்பாலே போய் அழுதான். திரும்ப வந்து சிமியோனைப் பிடித்து அவர்கள் கண்களுக்கு முன்பாகக் கட்டுவித்தான்.

பின்பு அவர்கள் சாக்குகளைத் தானியத்தால் நிரப்பவும் அவர்கள் பணத்தைத் திரும்ப அவனவன் சாக்கிலே போடவும் கட்டளையிட்டான். அவர்கள் தானியத்தைக் கழுதைகள் மேல் ஏற்றிக்கொண்டு எகிப்தை விட்டுப்புறப் பட்டார்கள். வழியிலே அவர்கள் கழுதைக்குத் தீனி போடும்படியாக ஒரு சாக்கைத் திறந்தபோது அதிலே பணமும் இருக்கக்கண்டு மிகவும் திகிலடைந்தார்கள். அவர்கள் வீடுபோய்ச்சேர்ந்து தங்களுக்குச் சம்பவித்ததையெல்லாம் யாக்கோபுக்கு அறிவித்து, எகிப்தின் அதிபதி எங்களை வேவுகாரர் என்று சொல்லி, நாங்கள் வேவு அல்ல என்பதை ரூபிக்கும்படியாக இளைய சகோதரனைத்

ரும்திப அழைத்து வரும்படி கற்பித்திருக்கிறான் என்றார்கள். அவர்கள் தங்கள் சாக்குகளிலுள்ள தானியத்தைக் கொட்டுகையில் அவனவன் சாக்கிலே அவனவன் பணமுடிப்பு இருக்கக் கண்டு பயமடைந்தார்கள்

பென்யமீனை எகிப்துக்கு அனுப்ப யாக்கோபு சம்மதிக்கவில்லை. ஏனென்றால் அவனைத் திரும்பக் காணக்கூடாமற் போகுமென்று பயந்தான். கடைசியாக ரூபன் தகப்பனை நோக்கி, "அவனை என் கையில் ஒப்புவியும், நான் அவனைத் திரும்ப உம்மிடத்தில் கொண்டு வருவேன். அவனைக் கொண்டு வராவிட்டால் என் இரண்டு குமாரரையும் கொன்று போடும்." என்றான். அப்படிச் சொல்லியும் யாக்கோபின் இருதயம் பயத்தினாலும், விசனத்தினாலும் தொய்ந்து போனது. தன் இளைய மகனை அனுப்புவது அவனுக்கு மனவருத்தமா யிருந்தது.

கேள்விகள்.

1. கானானிலே பஞ்சம் கொடிதானபோது யாக்கோபு தன் குமாரரை என்ன செய்யும்படியாகச் சொன்னான் ?

2. அவன் குமாரரில் எத்தனை பேர் எகிப்துக்குப் போனார்கள் ?

3. பென்யமீன் ஏன் தகப்பனோடே இருந்து விட்டான் ?

4. எகிப்திலே யாரிடத்தில் அவர்கள் தானியம் வாங்கினார்கள் ?

5. அதிபதி அவர்கள் மேல் என்ன குற்றம் சாட்டினான் ?

6. தாங்கள் குற்றமில்லாதவர்களென்று ரூபிக்க என்ன செய்யவேண்டுமென்று சொன்னான்?

7. அவர்களைக் காவலில் போட்டு விட்டு என்ன நினைத்தான்?

8. அவர்கள் தங்களுக்குள் என்ன பேசிக் கொண்டார்கள்?

9 அதை யோசேப்பு கவனித்துக் கேட்டு என்ன செய்தான்?

10. எந்த சகோதரனைப் பிணையாயிருக்கும்படி நிறுத்திக் கொண்டான்?

11. பிறகு யோசேப்பு என்ன கற்பித்தான்?

12. சாக்கிலிருந்த பணத்தை முதலில் எப்போது கண்டார்கள்?

13. அப்படிக் கண்டது அவர்களுக்கு என்னமாயிருந்தது?

14. வீட்டுக்கு வந்து தகப்பனுக்கு என்ன அறிவித்தார்கள்?

15. பென்யமீனை அனுப்புவது யாக்கோபுக்கு எப்படி யிருந்தது?

16. கடைசியாக ரூபன் என்ன சொன்னான்?

17. அதற்கு யாக்கோபு உடனே சம்மதித்தானா?

23-ம் பாடம்.

யோசேப்பின் சகோதரர் இரண்டாந்தரம் எகிப்துக்கு வந்தது,

மனப்பாடம்: "என்னை இவ்விடத்தில் வரும்படி விற்றுப் போட்டதினால் நீங்கள் சஞ்சலப் படவேண்டாம். அது

உங்களுக்கு விசனமாயிருக்கவும் வேண்டாம். ஜீவனை ரட்சணை செய்யும்படிக்கு தேவன் என்னை உங்களுக்கு முன்னே அனுப்பினார்" ஆதி. 45 : 5.

பஞ்சம் இன்னும் அதிக கொடிதாயிருந்ததினால் யாக்கோபுக்கும் அவன் குடும்பத்துக்கும் ஆகாரம் தேவையாயிருந்தது. ஆகையால் அவன் தன் குமாரரைத் திரும்பவும் எகிப்துக்குப் போய் தானியம் கொள்ளும்படிச் சொன்னான். அவர்கள் திரும்ப எகிப்துக்கு வரும்போது தங்கள் இளைய சகோதரனையும் கொண்டுவர வேண்டுமென்று யோசேப்பு சொன்னதை நினைவு கூர்ந்தார்கள். ஆகையால் தங்கள் தகப்பனை நோக்கி நாங்கள் பென்யமீனையும் எங்களோடு அழைத்துப் போகாவிட்டால் எகிப்துக்குப் போவதில் பிரயோஜனமில்லை என்றார்கள் கடைசியாக யூதா, தான் பென்யமீனுக்காகப் பிணைப்படுவதாய்ச் சொன்னான். யாக்கோபு அதற்குச் சம்மதித்து பென்யமீனையும் அவர்களோடு அனுப்பினான். அவர்கள் யோசேப்புக்குச் சில வெகுமதிகளையும் தானியம் வாங்க இரட்டிப்பான பணத்தையும் கொண்டு போனார்கள். அவர்கள் எகிப்துக்கு வந்து சேர்ந்தவுடனே யோசேப்பின் சமுகத்தில் நின்றார்கள். பென்யமீனும் அவர்களோடு வந்திருப்பதைக்கண்டு தன் வீட்டு விசாரணைக்காரனை அழைத்து அவர்களுக்குச் சாப்பாடு ஆயத்தம் பண்ண வேண்டுமென்றும், அவர்கள் மத்தியானத்தில் தன்னோடு சாப்பிடுவார்களென்றும் சொன்னான். அவர்கள் வீட்டு விசாரணைக்காரனோடு பேசி தங்கள் சாக்குகளில் தாங்கள் முன் கொண்டு வந்த பணம் இருந்ததைக் கண்டபோது தங்களுக்கு எவ்வளவு திகிலாயிருந்த தென்றும், இப்போது தாங்கள் இரட்டிப்பான பணம் கொண்டு வந்திருப்பதாகவும் சொன்னார்கள்.

யோசேப்பு மத்தியானத்தில் வீட்டுக்கு வந்து எல்லாருக்கும் போஜனம் வைக்கும்படியாகத் தன் வேலைக்காரருக்குக் கற்பித்தான். யோசேப்புக்குத் தனியாகவும், எகிப்தியருக்கும், யோசேப்பின் சகோதரருக்கும், வெவ்வேருகவும் வைத்தார்கள். யோசேப்பின் சகோதரருடைய வயதின் படியே மூத்தவன் முதல் இளையவன் மட்டும் வரிசைக்கிரமமாய் வைத்தார்கள். யோசேப்பு பென்யமீனுக்கு மற்றச் சகோதரரைப் பார்க்கிலும் ஐந்து மடங்கு போஜனம் வைத்தான். அவர்களெல்லாரும் சந்தோஷமாய்ச் சாப்பிட்டார்கள். அவர்கள் சாக்குகளில் தானியம் நிரப்பி அவனவன் பணத்தை அவனவன் சாக்கிலே போட்டு பென்யமீனுடைய சாக்கிலே தன் வெள்ளிப் பாத்திரத்தைப் போடும்படி யோசேப்பு தன் வீட்டு விசாரணைக்காரனுக்குச் சொன்னுன். அப்படியே அவன் செய்து அதிகாலையிலே அவர்களைக் கானுனுக்குப் பயணப்படுத்தி அனுப்பினுன். அவர்கள் கொஞ்ச தூரம் போனவுடனே யோசேப்பு தன் வீட்டு விசாரணைக்காரனை அனுப்பி அவர்களைத் தொடர்ந்து பிடித்து, நீங்கள் என் யோசேப்பின் வெள்ளிப் பாத்திரத்தைத் திருடிக்கொண்டு வந்தீர்களென்று கேட்கும்படியாகச் சொன்னுன். அவர்கள் தாங்கள் யோக்கியர்களென்றும் பாத்திரத்தைத் தாங்கள் திருடவில்லையென்றும் சொல்லி, தங்கள் சாக்குகளைப் பரிசோதிக்கும்படியாகவும் யாரிடத்திலாவது அது அகப்பட்டால் அவனைக் கொன்று போடும் படியாகவும் தாங்களும் யோசேப்புக்கு அடிமைகளாயிருப்பதாகவும் சொன்னுர்கள். வீட்டு விசாரிப்புக்காரன் மூத்தவன் முதல் இளையவன் வரைக்கும் அவர்கள் சாக்குகளைப் பரிசோதித்துப் பார்த்து கடைசியாக பென்யமீனுடைய சாக்கில் பாத்திரத்தைக் கண்டு பிடித்தான்.

சகோதரர் மிகவும் வியாகுலமடைந்து அவனோடு கூட யோசேப்பின் வீட்டுக்குத் திரும்பிப் போனார்கள். அவர்கள் வீட்டுக்கு வந்து சேர்ந்ததும் அவர்கள் தனக்குச் செய்த இந்தக் காரியத்தைப்பற்றி அவர்களைக் கடிந்து பேசினான். அதற்கு யூதா, தாங்களெல்லாரும் அவனுக்கு அடிமைகளாயிருப்பதாகவும், யோசேப்புக்கு எப்படிச் சம்மதமோ அப்படி யெல்லாம் தங்களுக்குச் செய்யும்படியாகவும் சொன்னான். ஆனால் யோசேப்பு, யாருடைய சாக்கில் பாத்திரம் அகப்பட்டதோ அவன் மாத்திரம் எனக்கு அடிமையாயிருக்க வேண்டும், மற்ற எல்லாரும் சமாதானத்தோடே தங்கள் தகப்பன் வீட்டுக்குத் திரும்பிப் போகலாமென்று சொன்னான்.

அப்போது யூதா, யாக்கோபு பென்யமீனை எவ்வளவாய் நேசிக்கிறானென்றும், தான் அவனைப் பத்திரமாய் கானானுக்குத் திரும்பக் கொண்டு வருவதாக அவனுக்கு வாக்குக் கொடுத்ததையும் யோசேப்புக்குத் தெரிவித்து கடைசியாகத் தான் அவனுக்குப் பதிலாக அடிமையாயிருப்பதாகவும் பென்யமீனைத தன்னோடு கூட்டிக்கொண்டு போகா விட்டால் தகப்பனுக்கு மகா வியாகுல முண்டாகுமென்றும் அதைத் தான் சகிக்க முடியாதென்றும் சொன்னான்.

யோசேப்பு இதை யெல்லாம் கேட்டு தன்னை அடக்க முடியாமல் அங்கே நின்ற ஜனங்களை யெல்லாம் வெளியே அனுப்பி விட்டு சத்தமிட்டு அழுது தன் சகோதரருக்குத் தன்னை வெளிப்படுத்தி "நான் யோசேப்பு, என் தகப்பன் இன்னும் உயிரோடே இருக்கிறாரா" என்று கேட்டான். அவன் சகோதரர், முன்னே அவனைக் கொடுமையாய் நடத்தினதை நினைத்து வருத்தப் பட்டார்கள். ஆனால்

யோசேப்பு அதற்காக அவர்கள் சஞ்சலப்படவேண்டிய தில்லையென்று சொல்லி தன் சொந்த ஜனத்தைக் காப்பாற்றும் படியாகவும் அவர்களைப் பஞ்சகாலத்தில் விடுவிக்கும் படியாகவும் இப்படி எகிப்துக்கு வரவேண்டியது தேவனுடைய சித்தமாயிருந்தது என்றும் சொன்னான். மேலும் அவர்கள் சீக்கிரமாய்ப் போய் யோசேப்பு இன்னும் உயிரோடிருப்பதாக யாக்கோபுக்கு அறிவிக்கும்படியாகவும் அவனைக் குடும்பத்தோடும் மிருக ஜீவன்களோடும் எகிப்துக்கு அழைத்து வரும்படியாகவும் துரிதப்படுத்தி, பஞ்சம் இன்னும் ஐந்து வருஷத்திற்கு இருக்குமென்றும் தெரிவித்தான்.

கேள்விகள்.

1. பஞ்சம் இன்னும் இருந்ததினால் யாக்கோபு தன் குமாரரை என்ன செய்யும்படிச் சொன்னான்?

2. அதற்கு அவர்கள் அவனுக்குச் சொன்ன பதில் என்ன?

3. எந்த நிபந்தனையின் மேல் யாக்கோபு பென்யமீனை அனுப்ப சம்மதித்தான்?

4. அவர்கள் எகிப்துக்கு என்ன கொண்டுபோனார்கள்?

5. பென்யமீன் அவர்களோடு வந்ததைக்கண்டு யோசேப்பு என்ன கற்பித்தான்?

6. யாக்கோபின் குமாரர் யோசேப்பின் வீட்டு விசாரணைக்காரனிடம் என்ன சொன்னார்கள்?

7. சாப்பாட்டுக்கு அவன் சகோதரர்களை எப்படி உட்கார வைத்தார்கள்?

8. யோசேப்பு பென்யமீனை விசேஷமாய் நடத்தி னதை எப்படிக் காண்பித்தான்?

9. அவர்கள் சாக்குகளில் என்ன வைக்கும்படிக் கற் பித்தான்?

10. பணத்தோடுகூட பென்யமீன் சாக்கில் எதைப் போடச் சொன்னான்?

11. அவர்கள் புறப்பட்டுப்போன போது அவர் களைப் பின் தொடர்ந்தது யார்? அவன் அவர்கள் மேல் என்ன குற்றஞ் சாட்டினான்?

12. அவன் சாக்குகளைப் பரிசோதித்து என்ன கண்டு பிடித்தான்?

13. சகோதரர் யோசேப்பிடம் திரும்பிப் பணி வாய்ச் சொன்னதென்ன?

14. யாரை மாத்திரம் யோசேப்பு அடிமையாக வைத்துக் கொள்வதாகச் சொன்னான்?

15. அதற்கு யூதா என்ன சொல்லி மன்றாடினான்?

16. சமீபத்தில் நின்ற ஜனங்களை யோசேப்பு வெளி யே அனுப்பிவிட்டு என்ன செய்தான்?

17. அது அவன் சகோதரருக்கு எப்படியிருந்தது?

18. யோசேப்பு தன் தகப்பனுக்காக என்ன ஏற் பாடு செய்தான்? ஏன்?

24-ம் பாடம்.

யாக்கோபின் குடும்பம் எகிப்துக்கு வந்தது.

மனப்பாடம்: "எகிப்து தேசம் உனக்கு முன்பாக இருக்கிறது. தேசத்திலுள்ள நல்ல இடத்திலே உன்

தகப்பனையும் உன் சகோதரரையும் குடியேறும்படி செய்." ஆதி. 47 : 6.

யோசேப்பின் சகோதரர் வந்திருப்பதை பார்வோன் கேள்விப்பட்டு மிகவும் சந்தோஷப்பட்டு யோசேப்பை நோக்கி "நீ உன் சகோதரரோடே சொல்ல வேண்டியது என்னவென்றால், உங்கள் கழுதைகளின் மேல் பொதியேற்றிக்கொண்டு புறப்பட்டு கானான் தேசத்துக்குப்போய் உங்கள் தகப்பனையும் உங்கள் குடும்பத்தாரையும் கூட்டிக்கொண்டு என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு எகிப்து தேசத்தின் நன்மையைத் தருவேன். தேசத்தின் கொழுமையைச் சாப்பிடுவீர்கள். நீங்கள் உங்கள் குழந்தைகளுக்காகவும் உங்கள் மனைவிகளுக்காகவும் வண்டிகளை எகிப்து தேசத்திலிருந்து கொண்டுபோய் அவர்களையும் உங்கள் தகப்பனுடனே ஏற்றிக்கொண்டு வாருங்கள்" என்று சொல்லச் சொன்னான். பார்வோன் கற்பித்தபடியே யோசேப்பு செய்து தன் சகோதரருக்கு வழிக்கு ஆகாரத்தையும் மாற்று வஸ்திரங்களையும் கொடுத்தான்.

அவர்கள் கானான் தேசம் சேர்ந்து யாக்கோபினிடத்தில் வந்து யோசேப்பு இன்னும் உயிரோடிருக்கிறானென்றும் அவன் எகிப்து தேசத்துக்கெல்லாம் அதிபதியாயிருக்கிறானென்றும் அறிவித்தார்கள். அவன் இருதயம் மூர்ச்சையடைந்தது. அவன் அவர்களை நம்பவில்லை. ஆனால் அவன் யோசேப்பு அனுப்பின வண்டிகளையும் தின்பண்டங்களையும் கண்டு அவன் சொல்லியனுப்பின வார்த்தைகளைக் கேட்டபோது அவனுடைய ஆவி உயிர்த்தது. தான் எகிப்துக்குப்போய் தன் மகன் யோசேப்பைப் பார்ப்பதாகத் தீர்மானித்தான்.

அவன் பிரயாணப்பட்டபோது கர்த்தர் அவனுக்குத் தரிசனமாகி நீ எகிப்துக்குப் போகப் பயப்பட வேண்

டாம் அங்கே உன்னைப் பெரிய ஜாதியாக்கி உன்னைத் திரும்பவும் வரப்பண்ணுவேன் என்றார். அவர்கள் கோசேன் நாட்டுக்கு வந்தபோது யோசேப்பு தன் இரதத்தில் ஏறிப்போய் அவர்களைச் சந்தித்தான். செத்துப்போனானென்று நினைத்திருந்து இப்போது தன் மகனைத் திரும்பக் கண்டது அவனுக்கு எவ்வளவு ஆனந்தமாயிருந்தது! யோசேப்பு தன் சகோதாரில் சிலரைப் பார்வோனிடம் அழைத்துப் போவதாகச் சொல்லி அவன் உங்கள் தொழில் என்ன என்று கேட்டால், மேய்ப்பர்கள் என்று சொல்லும்படியாகச் சொன்னான். அப்படியே யோசேப்பு தன் சகோதரரில் ஐந்து பேரைப் பார்வோனுக்கு முன்பாக நிறுத்தினான். "பார்வோன் அவனுடைய சகோதரரை நோக்கி உங்கள் தொழில் என்ன என்று கேட்டான். அதற்கு அவர்கள் உமது அடியாராகிய நாங்களும் எங்கள் பிதாக்களும் மந்தை மேய்க்கிறவர்களென்று பார்வோனிடத்தில் சொன்னதுமன்றி, கானான் தேசத்திலே பஞ்சம் கொடிதாயிருக்கிறது. உமது அடியாரின் மந்தைகளுக்கு மேய்ச்சல் இல்லாமையால் இத்தேசத்திலே தங்க வந்தோம் உமது அடியாராகிய நாங்கள் கோசேன் நாட்டில் குடியிக்கும்படி தயவு செய்யவேண்டுமென்று வேண்டிக் கொண்டார்கள் அப்பொழுது பார்வோன் யோசேப்பை நோக்கி, எகிப்து தேசம் உனக்கு முன்பாக இருக்கிறது. தேசத்திலுள்ள நல்ல இடத்திலே உன் தகப்பனையும் உன் சகோதரரையும் குடியேறும்படி செய். அவர்கள் கோசேன் நாட்டிலே குடியிருக்கலாம். அவர்களுக்குள்ளே திறமையுள்ளவர்கள் உண்டென்று உனக்குத் தெரிந்திருந்தால் அவர்களை என் ஆடுமாடுகளை விசாரிக்கிறதற்குத் தலைவராக வைக்கலாம் என்றான்."

கேள்விகள்.

1. யோசேப்பின் சகோதரர் வந்தது பார்வோனுக்கு எப்படியிருந்தது?

2. அவர்களைப் பற்றி பார்வோன் யோசேப்பினிடம் என்ன சொன்னான்?

3. யோசேப்பு அவர்கள் திரும்பிவரும்படியாக என்ன கொடுத்தான்?

4. அவர்கள் கானானுக்குப்போய் யாக்கோபு ஆச்சரியப்படும்படியாக என்ன செய்தி சொன்னார்கள்?

5. அவனுக்கு இந்தச் செய்தி என்னமாயிருந்தது?

6. யோசேப்பைப்பற்றி கேட்டவுடனே என்ன செய்யத் தீர்மானித்தான்?

7. பிரயாணம் போகும்போது கர்த்தர் யாக்கோபுக்கு என்ன வாக்குத்தத்தம் பண்ணினார்?

8. அவர்கள் கோசேன் நாட்டுக்கு வந்தபோது அவர்களைச் சந்தித்தது யார்?

9. அப்போது தகப்பனுக்கும் மகனுக்கும் என்னமாயிருந்தது?

10. யோசேப்பு சகோதரரில் எத்தனைப் பேரைப் பார்வோன் முன்பாக நிறுத்தினான்?

11. பார்வோன் அவர்களை என்ன கேட்டான்?

12. அவர்கள் சொன்ன பதில் என்ன?

13. அவர்கள் பார்வோனிடம் என்ன விண்ணப்பம் பண்ணினார்கள்?

14. அதற்கு பார்வோன் சொன்ன மறுமொழி என்ன?

15. அவர்களில் திறமையுள்ளவர்களுக்கு என்ன வேலை கொடுக்க விரும்பினான்?

25-ம் பாடம்.

யாக்கோபின் அந்தியகாலம்.

மனப்பாடம்: "இஸ்ரவேல் யோசேப்பை நோக்கி, இதோ நான் மரணமடையப்போகிறேன் தேவன் உங்களோடே இருப்பார். அவர் உங்கள் பிதாக்களின் தேசத்துக்கு உங்களைத் திரும்பவும் போகப்பண்ணுவார் என்றான்" ஆதி. 48 : 21.

யோசேப்பு தன் தகப்பன் யாக்கோபைப் பார்வோனைக் காணும்படி அழைத்துப் போனான். பார்வோன் கட்டளையிட்டபடியே யோசேப்பு தன் தகப்பனுக்கும் தன் சகோதரருக்கும் எகிப்தின் செழிப்பான நாட்டிலே சுதந்தரம் கொடுத்தான். இஸ்ரவேலர் கோசேன் நாட்டிலே குடியிருந்தார்கள். கர்த்தர் அவர்களை மிகவும் பெருகப் பண்ணினார்.

யாக்கோபு எகிப்திலே கொஞ்சங்குறைய பதினேழு வருஷம் சஞ்சரித்தபின், தான் மரணமடையும் காலம் சமீபித்ததென்று அறிந்து யோசேப்பை அழைத்து தன்னைக் கானான் தேசத்திலே அடக்கம் பண்ணும்படி ஆணையிட்டுக் கொடுக்கும்படியாகச்செய்தான். யாக்கோபு மரிக்குமுன்னே, யோசேப்பு தன் இரண்டு குமாரரையும் அவனிடம் கூட்டிக்கொண்டு போனான். யாக்கோபு அவர்களை ஆசீர்வதித்தான். அவன் தன் வலது கையை இளையவனாகிய எப்பிராயிமின் தலையின்மேலும் இடது கையை மூத்தவனாகிய மனாசேயின் தலையின் மேலும் வைத்தான். யோசேப்பு அதைத் தடுத்து மூத்தவனாகிய மனாசேயின் தலையின் மேல் வலது கையை வைக்கும்படிச் சொன்னதற்கு யாக்கோபு, அப்படி

யல்ல, மனுஷே பெருகுவான், இவனுடைய தம்பியோ இவனிலும் அதிகமாய்ப் பெருகுவான். அவனுடைய சந்ததியார் திரளான ஜனங்களாவார்கள் என்றான். பின்பு யாக்கோபு தன் குமாரரை மூத்தவனாகிய ரூபன் தொடங்கி ஒவ்வொருவரையும் வரிசையாய் ஆசீர்வதித்தான்.

யாக்கோபு மரித்தபோது எகிப்தியர் அவனுக்காக எழுபது நாள் துக்கம் கொண்டாடினார்கள், துக்கம் கொண்டாடும் நாட்கள் முடிந்த பின் யோசேப்பு தன் தகப்பனை அடக்கம் பண்ணும்படி கானானுக்குப் போக உத்தரவு கொடுக்கும்படியாகப் பார்வோனை வேண்டிக் கொண்டான். யாக்கோபை அடக்கம் பண்ணும்படியாக யோசேப்போடு கூடப் பெரிய பரிவாரம் சென்றது. அங்கே அவர்கள் ஏழு நாள் துக்கங் கொண்டாடினார்கள்.

யாக்கோபு மரித்த பின் யோசேப்பு ஒரு வேளை தாங்கள் அவனுக்குச் செய்த எல்லாப் பொல்லாங்குக் காகவும் தங்களுக்குச் சரிக்குச் சரிக்கட்டுவான் என்று பயந்தார்கள். யோசேப்போ அவர்களைத் திடப்படுத்தி “ பயப்படாதிருங்கள். நான் தேவனா நீங்கள் எனக்குத் தீங்கு செய்ய நினைத்தீர்கள். தேவனோ இப்பொழுது நடந்து வருகிறபடியே வெகு ஜனங்களை உயிரோடே காக்கும் படிக்கு அதை நன்மையாக முடியப்பண்ணினார். ஆதலால் பயப்படாதிருங்கள், நான் உங்களையும் உங்கள் குழந்தைகளையும் பராமறிப்பேன் என்று அவர்களுக்கு ஆறுதல் சொல்லி அவர்களோடே பட்சமாய்ப் பேசினான்.”

கர்த்தர் யாக்கோபுக்குக் கொடுத்த வாக்குத்தத்தத்தை நினைத்து இஸ்ரவேலைப் பெரிய ஜாதியாக்கினார். யோசேப்பு நூற்றுப் பத்து வருஷம் உயிரோடிருந்தான். அவன் சாகு முன்னே தன் சகோதரரைப் பார்த்து அவர்

கள் எகிப்து தேசத்தை விட்டு வாக்குத்தத்தத்தின் தேசத்திற்குத் திரும்பிப்போகும் போது தன் எலும்புகளையும் கொண்டு போவதாக ஆணையிட்டுக் கொடுக்கும்படிச் செய்தான்.

கேள்விகள்.

1. யாக்கோபு பார்வோனைச் சந்தித்தபோது அவன் என்ன செய்தான்?

2. யோசேப்பு தன் சகோதரருக்கு எந்த நாட்டைக் கொடுத்தான்?

3. கர்த்தர் இஸ்ரவேலை எப்படி நடத்தினர்?

4. யாக்கோபு எகிப்திலே எவ்வளவு காலம் குடியிருந்து தன் குமாரருக்குக் கடைசி ஆசிர்வாதம் கொடுத்தான்?

5. மூந்த அவன் யாரை அழைத்தான்?

6, யோசேப்பிடத்தில் என்ன ஆணை வாங்கிக் கொண்டான்?

7. யோசேப்பின் குமாரரை அவன் ஆசிர்வதித்த போது என்ன வித்தியாசம் செய்தான்?

8. ஒவ்வொருவருக்கும் என்ன ஆசிர்வாதம் கொடுத்தான்?

9. யாக்கோபு தன் குமாரரை யார் முதல் ஆசிவதித்தான்?

10. யாக்கோபு மரித்த போது யார் அவனுக்காகத் துக்கங் கொண்டாடினர்கள்?

11. யாக்கோபு எங்கே அடக்கம் பண்ணப்பட்டான். யார் அவனை அடக்கம் செய்தான்?

12. யாக்கோபு மரித்தபின் அவன் குமாரர் எதற்காக பயந்தார்கள்?

13. யோசேப்பு என்ன சொல்லி அவர்களை ஆறுதல் படுத்தினன்?

14. யோசேப்பு எவ்வளவு காலம் பிழைத்திருந்தான்?

15. அவன் சாகுமுன் சகோதரரிடத்தில் என்ன வாக்கு வாங்கிக் கொண்டான்?

26-ம் பாடம்.

முன்படித்த பாடங்களைத் திரும்பப் பார்த்தல்.

1. கேராரில் தேவன் ஈசாக்குக்கு எந்த உடன்படிக்கையைப் புதுப்பித்தார்?

2. ஈசாக்குக்கும் ரெபேக்காளுக்கும் பிறந்த இரண்டு குமாரர் பேர் என்ன? பெற்றோர் அவர்களை எப்படி நடத்தினர்கள்?

3. ஏசா ஏன் தன் சேஷ்ட புத்திரபாகத்தை விற்றுப்போட்டான்?

4. ஈசாக்கு முதிர்வயதாகிப் பார்வை மங்கிப்போய் தன் குமாரரை ஆசீர்வதிக்க விரும்பினபோது என்ன மோசம் நடந்தது? அதினல் வந்த பலன் என்ன?

5. யாக்கோபை ஏசாவின் கோபத்திற்குத் தப்புவிக்கும்படியாக ரெபேக்காள் அவனை எங்கே அனுப்பும்படி ஈசாக்கை ஏவினள்.

6, அவன் பிரயாணத்தில் நடந்ததென்ன? அவன் என்ன பிரதிக்கினை செய்தான்?

7. யாக்கோபு லாபானின் இரண்டு குமாரத்திகளை யும் விவாகம் பண்ணின காரணம் என்ன?

8. அவன் கானானுக்குத் திரும்பும்படி ஆசித்த போது லாபான் அவனுக்கு என்ன சம்பளம் கொடுப்பதாக ஒப்புக்கொண்டான்?

9. யாக்கோபு இரகசியமாக ஆரானை விட்டுப் புறப் பட்டபோது நடந்ததென்ன?

10. யாக்கோபு தன் சகோதரன் ஏசாவைச் சந்திக்க என்ன ஏற்பாடு செய்தான்?

11, அவன் போராடின இரவில் நடந்ததென்ன?

12, யாக்கோபு தன் குமாரர் எல்லாரிலும் யாரை அதிகமாய் சிநேகித்தான்? அதினால் என்ன நேரிட்டது?

13. யோசேப்பின் சகோதரர் அவன்மேல் பொறா மைப்பட்டதினால் அவனை என்ன செய்தார்கள்?

14. போத்திப்பாரின் வீட்டிலே தேவன் யோசேப் புக்கு என்ன தயவு கிடைக்கும்படியாகச் செய்தார்?

15, யோசேப்பு அநியாயமாய்க் காவலில் வைக்கப் பட்டிருந்தபோது யாருடைய சொப்பனங்களை அர்த்தப் படுத்தினான்?

16. யோசேப்பைக் காவலிலிருந்து விடுவிக்கும்படி தேவன் எவ்விதமாய் வழி திறந்தார்?

17. யோசேப்பு எகிப்தின்மேல் விசேஷித்த அதி காரியான விதத்தை விபரித்துச் சொல்லு?

18. யோசேப்பின் சகோதரர் தானியம் வாங்க வந்த போது யோசேப்பு அவர்களை எப்படி நடத்தினான்? கடைசியாக அவன் அவர்களோடு என்ன ஒழுங்கு செய்தான்?

19. அவர்கள் திரும்பிப் போனபோது தங்கள் சாக்குகளில் என்ன இருக்கக்கண்டார்கள்? அது அவர்களுக்கு எப்படியிருந்தது?

20. நடந்த விஷயங்களையெல்லாம் யாக்கோபு கேட்டு என்ன சொன்னான்? பிற்பாடு எப்படி தன் மனதை மாற்றினான்?

21. அவர்கள் இரண்டாந்தரம் எகிப்துக்குப் போனபோது நடந்த விசேஷங்களைச் சொல்லு.

22. யோசேப்பு தன்னை அவர்களுக்குத் தெரியப்படுத்தின பிறகு தன் தகப்பனுக்காகவும் சகோதரருக்காகவும் என்ன ஏற்பாடு பண்ணினான்?

23 எகிப்தில் அவர்கள் எங்கே குடியேறினார்கள்? தேவன் அவர்களுக்கு என்ன வாக்குத்தத்தம் பண்ணினார்?

24. யாக்கோபு எகிப்தில் எவ்வளவு காலம் இருந்தான்? அவன் மரித்தபோது எங்கே அடக்கம் பண்ணப்பட்டான்?

25. அவன் சாகு முன்னே தன் சொந்த குமாரரையும் யோசேப்பின் குமாரரையும் என்ன செய்தான்?

26. தேவன் இஸ்ரவேலை எகிப்தில் எப்படி ஆசீர்வதித்தார்?

விளம்பரம்

வேதாகமத்தின் முக்கிய சத்தியங்கள்பேரில் எழுதியிருக்கிற கீழ்க்கண்ட சிறு புஸ்தகங்களைப் பிரசுரித்திருக்கிறவர்களுக்கு, கீழ்ப்பாக்கம் போஸ்டு, சென்னப்பட்டணம் ஜில்லா என்று எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

சிறு புஸ்தகங்கள்.

1. எந்தநாளை ஒய்வுநாளாக ஆசரிக்கிறீர்? அதற்கு காரணமேன்? 3 காசு
2. உலகத்தின் முடிவு சமீபந்தானா? 3 காசு
3. புதிய ஏற்பாட்டு ஓய்வுநாள். 6 காசு.
4. கிறிஸ்து வருகையை குறிக்கும் அடையாளங்கள் 1 அணா.
5. ஓய்வுநாள் பள்ளிக்கூடங்களிலும், தேவாராதனைகளிலும் உபயோகிக்கத்தக்க வேத பாடங்கள் (முதல் பாகம்) அணா 2
6. ,, ,, (இரண்டாம் பாகம்) அணா 2
7. கிறிஸ்து சேரும் வழி. (தபால் செலவு உள்பட) 6. அணா.
8. முக்கிய போதகங்கள். 3. காசு
9. வேத பாடங்கள் துணிக்கட்டு 1 0 0

வேத பாடங்கள்	துணிக்கட்டு	1	0	0
,,	அட்டைக்கட்டு	0	14	0
,,	பேப்பர்கட்டு	0	12	0

"There is a Gate that Stands."

1. அதோ! ஓர் ஜீவ வாசல்! பார்!
அவ்வாசலில் ஓர் ஜோதி;
பேரொளியாய்ப் பிரகாசிப்பார்
மங்காத அருள் ஜோதி.

ஆ! ஆழ்ந்த அன்பு இதுவே!
அவ்வாசல் திறவுண்டதே,
பாரேன்! பாரேன்!
பார்! திறவுண்டதே.

2. இவ்வழி உட்பிரவேசிப்போர்
கண்டடைவார் பேர் வாழ்வும்;
தாழ்வார், மேலோர், இல்லார், உள்ளோர்,
எவ்வர்ண தேசத்தாரும்.

3. அஞ்சாமல் அண்டிச்சேருவோம்;
அவ்வாசலில் உட்செல்வோம்;
எப்பாவம் துன்பும் நீங்கிப்போம்,
கர்த்தாவைத் துதி செய்வோம்.

Printed at the R. Vivekananda Press, Vepery, Madras—1916.